செ.வெ.எண்: 597 நாள்: 13.09.2019

# புதுக்கோட்டை நகராட்சியில் ரூ.14.90 கோடி மதிப்பீட்டில் குளங்கள் தூர்வாரப்பட்டு வருகின்றன.

## முதலமைச்சரின் குடிமராமத்து திட்டப் பணிகளில் வரத்து வாய்க்கால்களை சீரமைக்கும் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை நகராட்சியில் ரூ.14.90 கோடி மதிப்பீட்டில் குளங்கள் தூர்வாரப்பட்டு வருகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் மேம்பாட்டிற்காக நீர்நிலை சார்ந்த திட்டங்களுக்கு அதிக முக்கியதுவம் அளித்து செயல்படுத்தி வருகிறார்கள். நீர்மேலாண்மை திட்டங்களின் மூலம் தொலைநோக்கு பார்வையுடன் தமிழகத்தை செழிப்பான மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதே இதன் குறிக்கோளாகும். கிராமங்களில் உள்ள குளங்கள், ஏரிகள் மற்றும் கண்மாய்களை முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் தூர்வாரப்பட்டு வருவதை போன்று நகர்புறங்களில் உள்ள குளங்களும் நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் புதுக்கோட்டை நகராட்சியில் மொத்தம் 46 குளங்கள் உள்ளன. நகராட்சியின் கட்டுபாட்டில் மட்டும் 36 குளங்கள் உள்ளன. புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள குளங்கள், நீர்வரத்து வாரிகள் தூர்வாரப்பட்டு சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மழைப்பொழிவின் போது மழைநீர் முழுமையாக தடையின்றி குளங்களுக்கு செல்ல வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சங்கிலி தொடராக அமைக்கப்பட்டிருந்த குளங்களுக்கான மிகவும் பழமை வாய்ந்த வரத்து வாரிகள் கண்டறியப்பட்டு அதில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. இதன் மூலம் நகராட்சியில் உள்ள அனைத்து குளங்களுக்கும் நகரின் பிற பகுதிகளில் பெய்யும் மழைநீர் வீணாகாமல் நேரடியாக குளங்களுக்கு வருவது உறுதி செய்யப்பட்டது. இதன் பயனாக தற்பொழுது பெய்து வரும் மழைநீர்

புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள குளங்களில் முழுவதுமாக சேமிக்கப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

மேலும் தற்பொழுதும் நகராட்சியில் உள்ள குளங்களை தூர்வாரும் வகையில் 2017-18 ஆம் நிதியாண்டில் நீர்நிலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை நகராட்சிக்கு ரூ.14.90 கோடி மதிப்பீட்டில் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியின் மூலம் தற்பொழுது நகராட்சியில் உள்ள காந்தி பூங்கா குளம், குமுந்தான் குளம், புதுஅரண்மனை குளம், மல்லான்குளம், இப்ராம்ஷா குளம், பழனியப்பா ஊரணி போன்ற பல்வேறு குளங்கள் தூர்வாருதல் மற்றும் கரைகளை பலப்படுத்தி நடைபாதை அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதே போன்று குளங்கள் நிரம்புவதற்கு நீர்வரத்து வாய்கால்கள் முறையாக இருந்தால் மட்டுமே மழைக்காலங்களில் பெய்யும் மழைநீர் வீணாகாமலும், பிறபகுதிகளுக்கு செல்லாமல் தடுக்க முடியும் என்பதை கருத்தில் கொண்டு, குளங்களுக்கு வரும் நீர்வரத்து வாய்க்கால்களை முழுவதுமாக சிமெண்ட் தளங்களாக மாற்றும் சிறப்பான திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வரத்து வாரிகள் 5மீ அகலத்தில் அமைக்கப்படுகிறது. மழைநீர் வரத்துவாரி துவங்கும் இடத்திலிருந்து குளங்களை வந்து சேரும் வரத்துவாரி முழுமைக்கும் சிமெண்ட் தரைத்தளம் அமைக்கப்படுகிறது.

இதன்படி புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள குளங்களுக்கு வரும் 12 மழைநீர் வரத்து வாய்க்கால்கள் 6.50 கி.மீ நீளத்திற்கு முழுவதுமாக சிமெண்ட் தரைத்தளமாக அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதனால் மழைநீர் வீணாகாமல் தங்குதடையின்றி குளங்களுக்கு வரும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழக அரசின் இது போன்ற திட்டங்களின் மூலம் புதுக்கோட்டை நகராட்சியில் நீர்மேலாண்மை திட்டங்கள் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு அனைத்து தரப்பினரிடையே பாராட்டை பெற்றுள்ளது. இது தவிர மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**